[1993 ஏப்ரல் 6

244—

கோவை, சென்னை அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் பிற மாநிலத்தைச் சேர்ந்த பிணியாளர்கள்.

*19643 டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை ஸ்டான்லி, ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் கேரள, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பிணியாளர்களுக்குச் செலவிடப்படும் சிகிச்சைத் தொகையை முறையே அம்மாநிலங் களிலிருந்து பெற அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு மருத்துவ கவனிப்பு விதிகள் 40ஏ-ன்படி ஆந்திரா, கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களிலிருந்து நம் மாநிலத் திற்கு வரும் அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தின ருக்கு, அவர்களிடம் அம்மாநில அரசில் பணி செய்யும் அடை யாள சான்றிதழைப் பெற்று, தமிழக அரசு மருத்துவமனை களில் இலவச மருத்துவ சிகிச்சை பரிமாற்ற முறையில் செய்யப் பட்டு வருகிறது. 'ஏ' மற்றும் 'பி' பிரிவு அலுவலர்களுக்கும் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆனால், அவர்களிடம் உணவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அரசு பணியில் இல்லாத பிற நோயாளிகளிடம் மருத்துவச் சிகிச்சைக்கான கட்டணம் அவர்களிடம் இருந்தே வசூலிக்கப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில் தமிழக மக்களுக்காக ஒதுக் கப்பட்ட நிதியில் கணிசமான தொகை மற்ற மாநிலங்களைச் சேர்ந்த நோயாளிகளுக்குச் சென்று சேருகிறது. உதாரணத்திற் குச் சொல்லப்போனால், எக்மோர் மெட்டர்னிடி ஹாஸ்பிடலில் 1991-92 ஆம் ஆண்டில், அந்த ஒரே ஆண்டில், புற்று நோயால் பாதிக்கப்பட்ட பெண்கள் மட்டும் 18 ஆயிரம் பேர்கள். ஆரம்பக் கட்டத்தில் உள்ள நோயாளிகளுக்கு ரூ. 15 ஆயிரமும், சற்று டிலேய்டு ஸ்டேஜ் பேஷன்ட்களுக்கு ஏறத்தாழ 25 ஆயிரம் ரூபாயும் செலவாகும் பட்சத்தில் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை

1993 ஏப்ரல் 6]

அமைச்சர் அவர்கள், தமிழகத்திலே உள்ள அனைத்து மருத்துவ மனைகளிலும் உள்ள வெளி மாநில நோயாளிகளுக்காக அதிக செலவை ஏற்க வேண்டியுள்ள காரணத்தால்—குறிப்பாக கிரானிக் கேசஸ், கேன்சர் கேசஸ், கோவை மருத்துவ மனையில் பாம்புக்கடி மற்றும் பூச்சிக்கடிகளுக்கான மருந்துகள் அதிகமாக கேரளா மாநிலத்தில் உள்ள பேஷன்ட்களுக்கு போகிறது அதைத் தடுக்கும் வண்ணம் அரசு ஒரு போர்க்கால நடவடிக்கையாக வரும் காலங்களிலாவது வெளி மாநிலங்களுடைய செலவை, அந்த மாநிலங்களிலிருந்து வருகிற அரசு ஊழியர்கள் அல்லாத நோயாளிகளுக்கும் வசூலிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயாளிகள் வருகிறபோது நம்முடைய மருத்துவமனைக்கு வந்தவுடனே, ஆந்திராவிலிருந்து வந்தாலும் சரி, கேரளாவிலிருந்து வந்தாலும் சரி, கர்நாடகாவிலிருந்து வந்தாலும் சரி, நம்முடைய மாநிலத்தில் இருக்கிற ஏதாவது ஒரு விலாசத்தை கொடுத்து விட்டு தான் அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைப் பெறுகிறார்கள். அந்த ஒவ்வொரு விலாசத்தையும் கண்டுபிடித்து அவர்கள் எந்த மாநிலத்தைச் சார்ந்தவர்கள் என்று கண்டு பிடிப்பது சிரமமாக இருக்கும். அதோடு மிகச் சிரமமான சூழ்நிலையில் நோய்வாய்ப்பட்டு அவர்கள் வருகிற போது அவர்களை மனிதாபிமானமற்ற அடிப்படையில் பார்க்க முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலையும் ஏற்படுகிறது. ஆனால், நிதிப்பிரச்சினை என்று வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது நூற்றுக்கு நூறு சரியான, நியாயமான ஒன்றாக இருக்கிறது. ஆனால் மனிதாபிமான அடிப்படையில் நடந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தப் பிரச்சினைகளை எல்லாம் கணக்கில் வைத்து தான் நாம் வைத்திருக்கிறோம். மற்ற மாநிலங்களிலிருந்து வரக் கூடியவர்களுக்கு கட்டணம் வசூலிக்கவேண்டுமென்று வைத்திருக்கிறோம். ஆனால், மற்ற மாநிலங்களிலிருந்துதான் வருகிறார்களா என்பதைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு சிரமம் ஏற்பட்டு விடுகிறது. அதைப்போல நம்முடைய மாநிலத்திலிருந்து பலபேர் அந்தப் பக்கம் போவதற்கான வாய்ப்பும் கூட இருக்கலாம் என்று கருதி, இந்தப் பிரச்சினையை அதிகமாக கிளப்பாமல் விட்டு விட்டாலே நல்லது என்று கூட நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சரோஜா அவர்கள், இங்கே புற்று நோய்க்காக ஆரம்ப

காலத்தில் 15,000 ரூபாயும், முற்றிய காலத்தில் 25,000 ரூபாயும் செலவாகிறது என்று சொன்னார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இந்த நாட்டைப் பொறுத்த வரையில் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை இந்தியா ஒரு நாடு. நம் மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் மற்ற மாநிலங்களில் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் தெரிவித்த கருத்து தவறு என்பதைப் போலப் போகிறீர்கள். அதைப் பெரிதுபடுத்த வேண்டாம்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : தலைவர் அவர்களே, கேள்வியாகத் தான் கேட்கிறேன். எனவே, இதுபோன்று நம்முடைய மாநிலத்திற்கு வருகிற நோயாளிகள், மற்ற மாநில நோயாளிகளாக இருந்தாலும், அவர்களிடம் நாம் கட்டணத்தை வசூலித்தால் அங்கே இருக்கிற நம் மக்கள் மீது கட்டணம் வசூலிக்க வேண்டிய நிலைமை ஏற்படுமென்பதால் நாமே அதற்கு வித்திட்டதைப் போலாகும். எனவே, இதை அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். அதையெல்லாம் தீவிரமாகப் பரிசீலனை செய்துதான் அப்படியே விட்டு விட்டோம். அதைத் தீவிரமாகப் பரிசீலனை செய்து ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்தால் சிரமம் ஏற்படும் என்று கருதி விட்டு விட்டோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திருமதி சரோஜா அவர்கள் சொன்னதில் நியாயம் இருக்கிறது. காரணம் ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை அல்லது ஸ்டான்லி மருத்துவமனையில் நீங்கள் போய் பார்த்தால் அநேகமாக மற்ற பக்கத்து மாநிலங்களிலிருந்து வந்த நோயாளிகள் தான் அங்கே அதிகமாக இருக்கிறார்கள். எனவே அதை வைத்துக்கொண்டு அப்படி ஒரு முடிவை எடுத்து விடக் கூடாது என்று தான் இந்த அரசாங்கம் விட்டு இருக்கிறது. சில இடங்களில் கன்னியாகுமரியில் பார்த்தால் நம்முடைய நோயாளிகள் பக்கத்து மாநிலத்திற்கு போவார்கள். எனவே இது ரெசிபுரோக்கலாக இருக்கிற காரணத்தால் கொஞ்சம் அதிக சுமையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நாம் அதிக சுமையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பது உண்மை. அதற்கு காரணம் நம்முடைய மருத்துவ சிகிச்சை சிறப்பானதாக இருப்பது கூட காரணமாக இருக்கலாம். எனவே எப்படி இருந்தாலும் இதை ஒரு பெரிய பிரச்சினையாக கிளப்பாமல் விட்டு விடலாம் என்று தான் கருதி இதற்கு இப்படி ஒரு பதிலை சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

1993 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மருத்துவமனைக்கு கேரளாவிலிருந்து வருகிற நோயாளிகள் அதிகம் தான். ஆனால் கோவையில் இட நெருக்கடி அதிகமாக இருக்கிற காரணத்தால் அங்கே கேரளாவிலிருந்து மற்ற மாநிலங்களிலிருந்து வருகிற நோயாளிகளை வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்படி வருகிறபோது அவர்களின் வசதிக்கேற்ப மற்ற மருத்துவ மனைகள், கே.ஜி. மருத்துவமனை இருக்கிறது, கோவை மெடிக்கல் சென்டர் இருக்கிறது. அதைப்போன்ற தனியார் மருத்துவமனைக்கு அவர்களை அழைத்துச் செல்லுங்கள் என்று அறிவுரை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவர் கேட்ட கேள்விதான்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு அறிவுரை மையம் அமைத்து செய்து கொண்டிருப்பது கடினம். வருகிற நோயாளிகள் ஏழைகளாக இருந்தால்தான் அவர்கள் நம்முடைய மருத்துவ மனைகளை நாடி வருகிறார்கள். இங்கே சிகிச்சை கிடைக்கும் என்று அவர்கள் நாடி வருகிறார்கள். அப்படி வருகிறபோது அவர்கள் இங்கே நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த ஏதாவது ஒரு விலாசத்தை கொடுத்து விட்டு வருகிறார்கள். எனவே தான் அவர்கள் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களா என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, அவர்கள் வருகிற போது, அவர்கள் நோயாளிகளாக இருக்கிற காரணத்தால், அவர்கள் விலாசம் என்ன என்று அதற்கு பின்னாலே போய், அதைக் கண்டு பிடித்த பின்னால்தான் நாங்கள் ட்ரீட்மென்ட் கொடுப்போம் என்று சொல்கிற வாய்ப்பு இல்லாத காரணத் தால்தான், இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. இருந்தாலும் இதையெல்லாம் ரெகுலேட் செய்வதற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ளலாம்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 245, திரு. மு. வெங்கடராம ரெட்டி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.